செ.வெ. எண் : 438 நாள் : 13.7.2007

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (13.7.2007) மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் குடிசை மாற்று வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, குடிசை மாற்று வாரியத்தினால் ஏழை எளிய மக்களுக்காகத் தற்போது கட்டப்பட்டு வரும் 42 ஆயிரம் வீடுகளையும், சுனாமியால் பாதிக்கப்பட்டு இதுவரை குடியிருப்பு பெறாமல் உள்ள 13 ஆயிரம் குடும்பங்களுக்காகக் கட்டப்பட்டு வரும் வீடுகளையும் போர்க்கால அடிப்படையில் ஓராண்டிற்குள் கட்டி முடித்திட வேண்டுமெனவும்;

சென்னை நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம் பகுதிகளில் ஏறத்தாழ 7 ஆயிரம் வீடுகள் கட்டி அப்பகுதிகளில் குடிசைகளில் வாழும் மக்களுக்கும், பழுதடைந்த வீடுகளில் குடியிருப்பவர்களுக்கும் ஒதுக்கீடு செய்வெதெனவும்;

திருவொற்றியூரில் அகில இந்திய வானொலி நிலையத்திற்குச் சொந்தமான நிலத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 3 ஆயிரத்து 616 வீடுகளும், ஒக்கியம் துரைப்பாக்கத்தில் 2 ஆயிரத்து 64 வீடுகளும் கட்டுவதெனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் கடலோர மாவட்டங்களில், கடலில் இருந்து 200 மீட்டர் தூரம் வரை உள்ள நிலப்பகுதியில் வாழும் மக்களுக்கு ஏறத்தாழ 5,500 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 43 கோடி ரூபாய்ச் செலவில் 2,000 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகளை வெகுவிரைவில் முடித்து கடலோரங்களில் வாழும் குடும்பங்களுக்கு வழங்கிட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

கடலோரப் பகுதிகளில் வாழும் 20 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் 10 கோடி ரூபாய்ச் செலவில் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் முடிவுசெய்யப்பட்டது.

ஜவஹர்லால் நேரு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பூர்வாங்க நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9.